# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1767/13 - 2012 ජූලි 18 වැනි බදාදා - 2012.07.18

1767/13 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

நிசா/நி 7/எல்ஏ/1664

பிழை திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய என்னால் 2011.06.06 ஆந் திகதிய 1709/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 4A ஆம் பக்கத்தில், இல. 06 - 433 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில், காணியின் பெயர் கவனயீனமாக, பதலவத்தை, ரதாவத்தை தெஹிகஹ வத்தை, ரங்வல பாலஎத்தனகே அரம்ப என குறிப்பிடப்பட்டு இருந்தது. எனினும் அக்காணியின் பெயர் திப்பொல்வத்தை, விஜேஹின்கெவத்தை, தொம்பகஹவத்தை என்பதே சரியானது என, 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2012, யூலை 09.
5/2/1/907

8- 63

---

எல்ஏ/1918

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி , நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளிப்பு 5 செயற்திட்டத்தின் கீழ் வவுனியா நீர் வழங்கல் திட்டத்தில், ராணிமில் துளைதுவாரக் கிணறு நிர்மாணிப்பு தொடர்பாக காணித் துண்டொன்று தேவைப்படுவதனால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2012, யூலை 09.
5/2/1/971.

**அட்டவணை**

வவுனியா மாவட்டம் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், இரம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவின் இரம்பைக் குளம் (ராணிமில் இடம்) எனும் கிராமத்தில் அமைந்துள்ள வாவி ஒதுக்கிடம் எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில், சுமார் 0.016 ஹெக்ரயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : வாவி ஒதுக்கிடம் ;
கிழக்கு : வாவி ஒதுக்கிடம் ;
தெற்கு : வாவி ஒதுக்கிடம் ;
மேற்கு : வாவி ஒதுக்கிடம் .

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : திருமதி ஜயந்தி பொன்னையா மற்றும்
திரு. நிமலன் பொன்னையா
அட்டோர்னி தத்துவக்காரர்
திரு. எஸ். கே. கனகலிங்கம்,
இல. 23/105, குட்செட் வீதி,
வவுனியா.

8- 64

---

எல்ஏ/1872

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நீர் வழங்கல், வடிகாவமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்தன ஆகிய நான், குறித்த சபைக்கு களுத்துறை ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்ட III ஆம் கட்டத்தின் கீழ் தொடங்கொட நிலக்கீழ் நீர் தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை கையகப்படுத்திக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையா சொத்துரிமையினை கையகப்படுத்திக் கொள்வதற்கு இவ் கட்டளையின் மூலம் அனுமதியளிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2012, யூலை 09.
5/2/2/972

**அட்டவணை**

களுத்துறை மாவட்டம், தொடன்கொட பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 800 E கிராம சேவகர் பிரிவில், கடுகல கிராமத்தில் அமைந்துள்ள சில்வர்டேல் வத்தை என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளரான திரு. எம். ஜீ. நசூர் என்பவரால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 275 ஆன நிலவரைபடத்தின் காணித்துண்டு 1 என குறித்துக்காட்டப்பட்டுள்ள 0.07673 ஹெக்டயார் 30.34 (பேர்ச்சஸ) ஆன விஸ்தீரணத்தையுடைய கீழ், குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : கொங்ரீட் வீதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி.

காணி உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : தலைவர்,
பிரதேச சபை,
தொடன்கொட.

8 - 65

எல்ஏ/1940

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், குறித்த சபைக்கு றுகுனுபுர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக மேலதிகமாக காணிப்பகுதியொன்றினை கையகப்படுத்திக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால் கையகப்படுத்திக் கொள்வதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையா சொத்துரிமையினை கையகப்படுத்திக் கொள்வதற்கு இக்கட்டளையின் மூலம் அனுமதியளிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2012, யூலை 09.*
*5/2/1/973*

**அட்டவணை**

*ஹம்பாந்தோட்டை மாவட்டம், சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 136, வேதிவெவ ஹெட்டிபொல கிராம சேவகர் பிரிவில், புருதகந்த கிராமத்தில் அமைந்துள்ள வேதிகமவெவ காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளரான திரு. எம். ஜீ. நசூர் என்பவரால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 274 ஆன நிலவரைபடத்தின் காணித்துண்டு 1 என குறித்துக்காட்டப்பட்டுள்ள 0.15461 ஹெக்டயார் ( 01றூட் 21.13 பேர்ச்சஸ் ) ஆன விஸ்தீரணத்தினையுடைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி-*

வடக்கு : திரு. ஆர். பீ. ஹெரிஸ் உரிமைகோரும் காணி ;
கிழக்கு : தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை உரிமைகோரும் காணி ;
தெற்கு : தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை உரிமைகோரும் காணி ;
மேற்கு : ஹம்பாந்தோட்டையிலிருந்து சூரியவெவயிற்கு செல்லும் பெருந்தெரு.

*காணி உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : 1. திரு. ஆர். பீ. ஹெரிஸ்,*
*சூரியவெவ*

*8 - 66*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.